## குடிநீர் மேம்பாட்டுப் பணிகள்! பாதாள சாக்கடைத் திட்டங்கள்! புதிய சாலைகள்! மழைநீர் வடிகால் பணிகள்!

# நகராட்சி -பேரூராட்சிகள் தரம் உயர்த்தப்படும்!

## சட்டப்பேரவையில் நகராட்சி – குடிநீர் வழங்கல் துறை மானியத்தில் அமைச்சர் கே.என்.நேரு அடுக்கடுக்காக 57 அறிவிப்புகளை வெளியிட்டார்!

**சென்னை, மார்ச் 27 - சட்டப்பேரவையில் நகராட்சி - குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில் - அமைச்சர் கே.என்.நேரு அடுக்கடுக்கான 57 அறவிப்புகளை அறிவித்தார்.**

அவர் அறிவித்த அறிவிப்புகள் வருமாறு:-

உறுப்பினர் செ.ராஜேஷ்குமார் நேற்று முன்தினம் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எல்லா பகுதிகளுக்கும் அடிப்படைவசதிகளைசெய்யவேண்டுமென்று கோரினார். அப்படி சொல்கின்றபோது, ஏ.வி.எம். கால்வாயை சரிசெய்து தர வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அந்த பணி உட்பட, முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

**நகராட்சி அறிவிப்புகள்**

**1) புதிய பேருந்து நிலையங்கள்**

கும்பகோணம் மாநகராட்சி, அம்பாசமுத்திரம், ஆம்பூர், கள்ளக்குறிச்சி, சாத்தூர், செங்கல்பட்டு, திருக்கோவிலூர், திருச்செந்தூர் ஆகிய நகராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்களும், ஈரோடு மாநகராட்சி, ஆற்காடு, ராணிப்பேட்டை நகராட்சிகளின் பேருந்து நிலையங்களில் கூடுதல் பணிகளுக்காக ரூ.142.68 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**2) பேருந்து நிலையங்கள் மேம்பாடு**

கடலூர், தஞ்சாவூர் மாநகராட்சிகள், ஆரணி, உடுமலைப்பேட்டை, ஒட்டன்சத்திரம், காரமடை, கிருஷ்ணகிரி, குடியாத்தம், குமாரபாளையம், கோவில்பட்டி, திருவாரூர், துறையூர், தேனிஅல்லி நகரம், பட்டுக்கோட்டை, பல்லடம், பொன்னேரி, முசிறி, விருதுநகர் ஆகிய நகராட்சிகளிலுள்ள பேருந்து நிலையங்கள் ரூ.84.26 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**3) குடிநீர் அபிவிருத்தி பணிகள்**

கரூர், கும்பகோணம், தாம்பரம், திருநெல்வேலி மாநகராட்சிகள், அரக்கோணம், ஆத்தூர், ஆற்காடு, இராமேஸ்வரம், எடப்பாடி, கள்ளக்குறிச்சி, கொமாரபாளையம், செங்கோட்டை, திருப்பத்தூர், திருவில்லிபுத்தூர், திருவேற்காடு, தென்காசி, நெல்லிக்குப்பம், துவாக்குடி, பண்ருட்டி, பூந்தமல்லி, பொள்ளாச்சி, மறைமலை நகர், வாணியம்பாடி, வெள்ளக்கோவில், உளுந்தூர்பேட்டை ஆகிய நகராட்சிகளில் ரூ.704.76 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்படும்.

**4) சந்தைகள்** : தூத்துக்குடி, புதுக்கோட்டை மாநகராட்சிகள், ஆத்தூர், திருத்துறைப்பூண்டி, தேவகோட்டை, புஞ்சை புளியம்பட்டி, பெரியகுளம், திருவாரூர் ஆகிய நகராட்சிகளில் ரூ.62.95 கோடி மதிப்பீட்டில் புதிய சந்தைகள் அமைக்கப்படும்.

**5) சந்தைகள் புதுப்பித்தல்** : திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியலூர், கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், முசிறி, மேட்டூர், கோபிச்செட்டிபாளையம், வாலாஜாப்பேட்டை ஆகிய நகராட்சிகளில் ரூ.38.80 கோடி மதிப்பீட்டில் ஏற்கனவே உள்ள சந்தைகள் மேம்படுத்தப்படும்.

**6) வணிக வளாகம்** : வால்பாறை நகராட்சியில் ரூ.9 கோடி மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் அமைக்கப்படும்.

**7) பூங்காக்கள்** : மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பசுமைவெளிகளை அதிகரிக்கும் நோக்கில், இந்த ஆண்டு ரூ.27.26 கோடி மதிப்பீட்டில் 50 புதிய பூங்காக்கள் அமைக்கப்படும்.

**8) தெரு விளக்குகள்** : மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் ரூ.311.78 கோடி மதிப்பீட்டில் 69,500 புதிய LED தெரு விளக்குகள் அமைக்கப்படும். 45,700 பழைய தெரு விளக்குகளை புதிய LED விளக்குகளாக மாற்றப்படும்.

**9) நீர்நிலைகள் மேம்பாடு** : நீர்நிலைகளை புனரமைத்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கு இவ்வரசு மிக முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த ஆண்டு ரூ.19.53 கோடி மதிப்பீட்டில் 25 நீர்நிலைகளின் கரைகள் பலப்படுத்தி நடைபாதைகள், பசுமைவெளிப் பூங்காக்கள் அமைக்கப்படும்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள கொட்டப்பட்டு ஏரி, கொல்லங்கோடு நகராட்சியில் உள்ள AVM கால்வாய், மயிலாடுதுறை மற்றும் இராமநாதபுரம் நகராட்சிகளில் அமைந்துள்ள அனைத்து நீர்நிலைகளும் ஜெர்மன் வங்கி நிதி உதவியுடன் ரூ.95.35 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

**10) பல்லடுக்கு வாகன நிறுத்தம்**

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும் வாகன நெரிசலை குறைக்கும் வகையிலும், சுற்றுலாத் தலமான வால்பாறை நகராட்சியில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் பல்லடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கப்படும்.

**11) நவீன இறைச்சிக் கூடங்கள்**

கடலூர் மாநகராட்சி, இராமநாதபுரம், காயல்பட்டினம், திருத்துறைப்பூண்டி, திருவத்திபுரம், பரமக்குடி, விழுப்புரம் நகராட்சிகளில் ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் புதிய நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கப்படும். மேலும், அருப்புக்கோட்டை மற்றும் மேட்டூர் நகராட்சிகளில் உள்ள இறைச்சிக் கூடங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**12) விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு மையம்** : மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் தெரு நாய்களின் எண்ணிக்கையினை கட்டுப்படுத்தும் பொருட்டு நகர்ப்புற உள்ளாட்சிகளில் விலங்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு மையங்கள் முழுமையாக அனைத்து இடங்களிலும் அமைக்கப்படும்.

**13) நவீன எரிவாயு தகன மேடைகள்**

சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், சுகாதாரமான சூழலை உருவாக்கவும், இந்த ஆண்டு ரூ.27.47 கோடி மதிப்பீட்டில் கடலூர், ஓசூர், தூத்துக்குடி, தாம்பரம், புதுக்கோட்டை, திண்டுக்கல் மாநகராட்சிகள், சிவகங்கை, விருதுநகர், உதகமண்டலம், மறைமலைநகர், பெரம்பலூர், அரியலூர், திருவத்திபுரம் நகராட்சிகளில் புதிய நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும். தஞ்சாவூர், காஞ்சிபுரம் மாநகராட்சிகள், வேதாரண்யம், அருப்புக்கோட்டை, விழுப்புரம், திருநின்றவூர், புகளூர் ஆகிய நகராட்சிகளிலுள்ள எரிவாயு தகன மேடைகள் மேம்படுத்தப்படும்.

**14) மண்டல அலுவலகங்கள்** : புதிதாக உருவாக்கப்பட்ட நாமக்கல், புதுக்கோட்டை, திருவண்ணாமலை மாநக ராட்சிகளில் ரூ.48 கோடி மதிப்பீட்டில் புதிய மண்டல அலுவலகங்கள் கட்டப்படும்.

## தாம்பரம் மாநகராட்சியில் ரூ.750 கோடியில் பாதாள சாக்கடைத் திட்டம்!

**15) பள்ளி கட்டட மேம்பாடு**

மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளி மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி பள்ளிகளுக்கு தேவையான புதிய வகுப்பறைகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.87.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டடங்கள் ரூ.52.26 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

**16) கழிவு நீரினை சுத்திகரித்து மறு உபயோகம் செய்தல்** : கடலூர் மாநகராட்சி, தருமபுரி, அருப்புக்கோட்டை நகராட்சிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் நீரினை மறுசுத்திகரிப்பு செய்து தொழிற்சாலைகளில் பயன்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

**17) விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம்** : தாம்பரம் மாநகராட்சி மற்றும் விருதுநகர் நகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்க முதற்கட்டமாக தாம்பரம் மாநகராட்சிக்கு ரூ.750 கோடியும், விருதுநகர் நகராட்சிக்கு ரூ.50 கோடியும், தேசிய வீட்டு வசதி வங்கி மற்றும் ஜெர்மன் வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

**18) புதிய பாதாள சாக்கடை திட்டங்கள்**

பாதாள சாக்கடை வசதியில்லாத புதிய மாவட்ட தலைநகரங்களான தென்காசி, ராணிப்பேட்டை நகராட்சிகளில் பாதாள சாக்கடை அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

**19) மழைநீர் வடிகால்** : முதலமைச்சர் சட்டமன்ற பேரவையில் ரூ.3,750 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புர உள்ளாட்சிகளில் புதியதாக சாலைகள் அமைக்கவும், தார்சாலைகளை புதுப்பிக்கவும் அறிவித்தார்கள். மேற்படி சாலைகள் அமைக்கும் போது தேவைப்படும் சாலைகளில் 870 கி.மீ. நீளத்திற்கு ரூ.481 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்படும்.



மேலும், மதுரை மாநகராட்சியில் மிகவும் பாதிப்புக்குள்ளான பழைய நகரப்பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்களை புனரமைக்கும் பணிகளும், ஓசூர் மாநகராட்சியில் நீர்நிலைகளை ஒருங்கிணைக்கும் வகையில் வடிகால் அமைக்கும் பணிகளும் ஜெர்மன் வங்கி நிதி உதவியுடன் ரூ.150 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**20. நகராட்சிகளைத் தரம் உயர்த்துதல்** : திருசெங்கோடு, உடுமலைப்பேட்டை, பழனி ஆகிய மூன்று தேர்வு நிலை நகராட்சிகள் சிறப்பு நிலை நகராட்சிகளாகவும், நந்திவரம்கூடுவாஞ்சேரி, பல்லடம், இராமேஸ்வரம் ஆகிய மூன்று முதல் நிலை நகராட்சிகள் தேர்வு நிலை நகராட்சிகளாகவும், மாங்காடு, குன்றத்தூர், வெள்ளகோவில், அரியலூர், அம்பாசமுத்திரம் ஆகிய ஐந்து இரண்டாம் நிலை நகராட்சிகள் முதல் நிலை நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்படும்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**21. பள்ளிக் கட்டடங்கள்**

பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது இவ்வரசின் தலையாய நோக்கங்களில் ஒன்றாகும். பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்த ஆண்டு புதிய பள்ளிக் கட்டடங்கள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் ரூ.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**22. நடைபாதை அமைத்தல்**

சென்னை பெருநகரை அழகுபடுத்தி, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பாதுகாப்பாக நடைபாதைகளை பயன்படுத்தும் விதமாக, வாகனம் சாரா போக்குவரத்துத் திட்டத்தின்கீழ், பேருந்து தட சாலைகளில் 200 கி.மீ. நீளத்திற்கு ரூ.200 கோடி மதிப்பீட்டில் நடைபாதைகள் அமைக்கப்படும்.

**23. நீர்வழிக் கால்வாய்களைச் சீரமைத்தல்** : பெருநகர சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத் தடுப்பு பணிகளின் ஒரு பகுதியாக ரூ.95 கோடி மதிப்பீட்டில் ஓட்டேரி நல்லா மற்றும் விருகம்பாக்கம் கால்வாய்களை தடுப்புச் சுவர் கொண்டு உயர்த்தவும், குப்பைகள் தேங்காமல் இருக்க பாதுகாப்பு வேலிகள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**24. மழைநீர் சேகரித்தல்** : பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த ரூ.52 கோடி மதிப்பீட்டில் பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்படும்.

**25. நீர்நிலைகள் புனரமைத்தல்**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள ஏரிகள் மற்றும் குளங்களை மறுசீரமைத்து, நீர்நிலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள பாதிப்பினை தவிர்க்கவும் ரூ.120 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**26. புதிய பூங்கா அமைத்தல்** : பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளை பசுமையாக்கி, இயற்கைச் சூழலை ஏற்படுத்த ரூ.60 கோடி மதிப்பீட்டில் 30 புதிய பூங்காக்கள் அமைக்கப்படும்.

**27. புதிய உள் விளையாட்டரங்கம்**

சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும்பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் ரூ.45 கோடி மதிப்பீட்டில் உள் விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும்.

**28. நவீன எரிவாயு தகன மேடைகள்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் மயான பூமிகளில் ரூ.60 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும்.

**29. இறைச்சிக் கூடம்** : பெருநகர சென்னை மாநகராட்சியின் கள்ளிக்குப்பம், வில்லிவாக்கம் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் இறைச்சிக் கூடங்கள் நவீன வசதிகளுடன் ரூ.60 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**30. வணிக வளாகங்கள்** : தகவல் தொழில்நுட்பம், தொழில் துறை மற்றும் பிற துறைகளில் பெருகிவரும் இடத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கிலும், வருவாயைப் பெருக்கும் நோக்கிலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் முக்கிய இடங்களில் பொது மற்றும் தனியார் துறை பங்களிப்புமூலம் நவீன வசதிகளுடன்கூடிய உயர்தர வணிக வளாகங்கள் கட்டப்படும்.

## சென்னையில் 200 கி.மீ. நீளத்திற்கு ரூ.200 கோடி மதிப்பீட்டில் நடைபாதைகள்!

**பேரூராட்சிகள்**

**31. புதிய பேருந்து நிலையங்கள்**

பாலப்பள்ளம், நாட்டரசன்கோட்டை, புதுப்பாளையம், குன்னத்தூர், உடன்குடி, ஆரணி, ஏர்வாடி, கும்மிடிப்பூண்டி, பரமத்தி, திருபுவனம், பர்கூர் ஆகிய 11 பேரூராட்சிகளில் ரூ.49 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும்.

**32. பேருந்து நிலையங்கள் மேம்பாடு**

காரிமங்கலம், திற்பரப்பு, கலவை, புதுவயல், முக்கூடல், சிறுகமணி, காட்டுப்புதூர் மற்றும் சேரன்மகாதேவி ஆகிய பேரூராட்சிகளில் ஏற்கெனவே பயன்பாட்டிலுள்ள 8 பேருந்து நிலையங்கள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

**33. சந்தைகள்** : சின்னசேலம், காவேரிப் பட்டணம், ஓடைப்பட்டி, பத்தமடை, ஒடுகத்தூர், பனப்பாக்கம், ஆயக்குடி, அரச்சலூர், பி.மேட்டுப்பாளையம், ஆகிய 9 பேரூராட்சிகளில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் புதிய சந்தைகள் அமைக்கப்படும்.

**34. சந்தைகள் புதுப்பித்தல்**

காரிமங்கலம், காசிபாளையம், வாணிப்புத்தூர், பர்கூர், ஏர்வாடி, அந்தியூர், பள்ளத்தூர், சிறுகமணி, கருப்பூர் ஆகிய 9 பேரூராட்சிகளில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் சந்தைகள் புதுப்பிக்கப்படும்.

**35. குடிநீர்ப் பணிகள்** : திருப்போரூர், பி.மேட்டுப்பாளையம், அத்தாணி, கூகலூர், ஆலங்குளம், நசியனூர், கன்னிவாடி, நாட்றாம்பள்ளி, சூளேஸ்வரன்பட்டி, ஒடையக்குளம், குரும்பலூர், பர்கூர், பி.மல்லாபுரம், நாரணம்மாள்புரம், சங்கர் நகர் ஆகிய பேரூராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சீரான குடிநீர் வழங்க ரூ.140 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**36. குடிநீர் அபிவிருத்திப் பணிகள்**

ரூ.15 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளில் நீண்ட காலமாக செயல்பாட்டில் இருந்துவரும் குடிநீர்த் திட்டங்களின் பிரதான குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்கள் மாற்றியமைக்கப்படும்.

**37. அறிவுசார் மையம்** : போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் பயிற்சி பெற ஏதுவாக நடப்பாண்டில் திருக்கழுகுன்றம், மீஞ்சூர், திமிரி, அரூர், பாலக்கோடு, கெலமங்கலம், பர்கூர், தேன்கனிக்கோட்டை, செஞ்சி, சுவாமிமலை, வல்லம், தரங்கம்பாடி, நத்தம், கோட்டையூர், ஆலங்குடி, ஜலகண்டாபுரம், கருப்பூர், வாழப்பாடி, தேனி மாவட்டத்திலுள்ள வடுகப்பட்டி, நாமக்கல் மாவட்டத்திலுள்ள வேலூர் ஆகிய பேரூராட்சிகளில் ரூ.33 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையங்கள் அமைக்கப்படும்.

**38. மண் சாலைகள் மேம்பாடு**

பேரூராட்சிகளில் அனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தும் விதத்தில், ரூ.295 கோடி மதிப்பீட்டில் 360 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகள், தார்ச் சாலை, கான்கிரீட் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக மாற்றப்படும்.

**39. சேதமடைந்த சாலைகளைச் சீரமைத்தல்** : பேரூராட்சிப் பகுதிகளில் இயற்கை இடர்பாடுகள், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளால் சேதமடைந்த சாலைகள் ரூ.670 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

**40. அலுவலகக் கட்டடங்கள்**

திருப்போரூர், திருமலை யம்பாளையம், நத்தம், அரியப்பம்பாளையம், சலங்கபாளையம், மண்ணச்சநல்லூர், கிருஷ்ணராயபுரம், புதுவயல், கோம்பை, தாத்தையங்கார்பேட்டை, சின்னக்காம்பாளையம், மூலனூர், வேப்பத்தூர், திருவிடைமருதூர், கண்ணம்பாளையம், தொண்டி, பாலகிருட்டிணம்பட்டி, வாழப்பாடி, முளகுமூடு, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருபுவனம், கீரமங்கலம், பூலாம்பாடி, ஒடையகுளம், மருதூர், வடமதுரை ஆகிய பேரூராட்சிகளில் ரூ.36 கோடி மதிப்பீட்டில் புதியதாக அலுவலக கட்டடங்கள் கட்டப்படும்.

**41) பள்ளிக் கட்டடங்கள்!** : பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள அரசு பள்ளிகளில் ரூ.43.92 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் கட்டும் பணிகளும், ரூ.26.35 கோடி மதிப்பீட்டில் பழுதடைந்த பள்ளிக் கட்டடங்கள் சீரமைக்கும் பணிகளும் ஆக மொத்தம் ரூ.70.27 கோடி மதிப்பீட்டில் பள்ளி கட்டட பணிகள் மேற்கொள்ளப்படும்.

**42) தமிழ்நாடு நகர்ப்புர வேலை வாய்ப்பு திட்டம்** : தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டம் தற்போது 87 பேரூராட்சிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மேலும் 87 பேரூராட்சிகளுடன், நகர்புற உள்ளாட்சிகளுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

**43) சிறு அளவிலான தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்** : வடிகால்கள், ஓடைகள், ஆறுகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க ஆங்காங்கே நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் சிறிய அளவிலான தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

**44) விலங்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு மையம்** : பேரூராட்சி பகுதிகளில் தெரு நாய்களின் எண்ணிக்கையினை கட்டுப்படுத்தும்பொருட்டு பேரூராட்சி பகுதிகளில் விலங்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்படும்.

**45) நவீன எரிவாயு தகனமேடைகள்**

சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், சுகாதாரமான சுற்றுச்சூழலை உருவாக்கவும் கொளத்துபாளையம், பி.மேட்டுப்பா ளையம், வாலாஜாபாத், விளாப்பாக்கம், பனப்பாக்கம், கோட்டையூர், மார்க்கையன் கோட்டை, கெங்குவார்பட்டி, வீரவநல்லூர், ருத்ராவதி, புதுப்பாளை யம், குச்சனூர், பூதிப்புரம், வீரப்பாண்டி, பேளூர், முக்கூடல் ஆகிய 16 பேரூராட்சிகளில் ரூ.29 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகனமேடைகள் அமைக்கப்படும்.

**46) தெரு விளக்குகள்**

பேரூராட்சிகளில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளிலும், பேரூராட்சிகளாக தரம் உயர்த்தப்பட உள்ள மற்றும் புதிதாக இணைக்கப்பட உள்ள ஊராட்சி பகுதிகளிலும் 1.50 இலட்சம் எண்ணிக்கையிலான LED தெருவிளக்குகள் ரூ.65 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

47) **பேரூராட்சிகளை தரம் உயர்த்துதல்!** சர்க்கார்சாமகுளம், ஒத்தக்கால் மண்டபம், பி.என்.பட்டி (பொட்டனேரி நல்ல கவுண்டன்பட்டி), திருமழிசை, பேராவூரணி, நம்பியூர், வாடிப்பட்டி, பருகூர், பழனிசெட்டிபட்டி, குலசேகரம் ஆகிய தேர்வுநிலை பேரூராட்சிகள் மற்றும் செட்டிபாளையம், இடிகரை, மேலச்சொக்கநாதபுரம் ஆகிய முதல்நிலை பேரூராட்சிகளை சிறப்புநிலை பேரூராட்சிகளாகவும், மோப்பிரிபாளையம், சாமளாபுரம், அகரம், மேலகரம், சூளேஸ்வரன்பட்டி, தொண்டாமுத்தூர், சேவுகம்பட்டி, முதுகுளத்தூர் ஆகிய முதல்நிலை பேரூராட்சிகளை தேர்வுநிலை பேரூராட்சிகளாகவும், நங்கவள்ளி, நெய்யூர், வெள்ளிமலை, புத்தளம், மண்டைக்காடு, பூதிப்புரம், தென்தாமரைகுளம், ஒலகடம், கப்பியறை, ஆற்றூர், சோழபுரம், எலத்தூர், ஆலாந்துறை ஆகிய இரண்டாம் நிலை பேரூராட்சிகளை முதல்நிலை பேரூராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்படும்.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்!**

**48) கூட்டுக் குடிநீர் திட்டம்**

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஒன்றியம், கெம்மாரம்பாளையம், வெள்ளியங்காடு மற்றும் நெல்லித்துறை ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த 21 பழங்குடியின குடியிருப்புகளிலுள்ள 2 ஆயிரம் மக்கள் பயன்பெறும்வகையில் பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.24.50 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

**49) குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்**

தாம்பரம் மாநகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை மேம்படுத்த ரூ.30 கோடி மதிப்பீட்டில் பொதுவான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

**50) புவியியல் தகவல் அமைப்பு தளம்** : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அனைத்து கூட்டுக் குடிநீர் திட்டங்களின் சொத்துக்களை, புவியியல் தகவல் அமைப்பின் இணையதள Dash Boardல் கொண்டுவரப்படும்.

**51) குறை தீர்வு மையம்** : அனைத்து நகர்ப்புர, ஊரக பகுதிகளுக்கான குடிநீர் விநியோகத்தில் பொதுமக்கள் தெரிவிக்கும் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் ஒரு தனி குறை தீர்வு மையம் உருவாக்கப்படும்.

**52) பொது நீர்சேகரிப்பு கிணறுகள்**

தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்பொழுதெல்லாம் குடிநீர் விநியோகம் தடைபடுவதை தவிர்க்கும் பொருட்டு பொது நீர்சேகரிப்பு கிணறு அமைத்து தலைமை நீரேற்று நிலையங்களுடன் இணைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**53) கூட்டுக் குடிநீர் திட்டங்கள்**

சென்ற ஆண்டு ஜல் ஜீவன் திட்ட நீட்டிப்பை எதிர்நோக்கி அறிவிக்கப்பட்ட 3 கூட்டுக் குடிநீர் திட்டங்களுடன் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட 7 கூட்டுக் குடிநீர் திட்டங்களையும் சேர்த்து 10 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இவற்றுடன் தமிழ்நாட்டில் உள்ள ஊரகப் பகுதிகளில் குடிநீர் தன்னிறைவு பெறும்வகையில் தயாரிக்கப்பட்ட மீதமுள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களையும் பொது மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் நிறைவேற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். முதற்கட்டமாக புதுக்கோட்டை- விராலிமலை- திருமயம் கூட்டுக் குடிநீர் திட்டம் இம்முயற்சியின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.

54) **தொழில் பூங்காக்களுக்கு குடிநீர் வழங்கல்!** கோவை மற்றும் திருப்பூர் பகுதிகளில் புதியதாக அமையவுள்ள வரப்பட்டி டிஃபன்ஸ் காரிடார், கேத்தனூர் செமி கண்டக்டர் பார்க் மற்றும் சூலூர் ஏரோஸ் பேஸ் பார்க் ஆகியவற்றிற்கு முருகம்பாளையம் குடிநீர் விநியோக நிலையத்திலிருந்து 7.5 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்படும்.

**சென்னை பெருநகர குடிநீர் வழங்கல்!**

55) **கழிவுநீர் கட்டமைப்புகளை புனரமைத்தல்** : சென்னை பெருநகரின் மையப் பகுதியிலுள்ள மிகவும் பழமையான கழிவுநீர் கட்டமைப்புகளை புனரமைப்பதின் முதற்கட்டமாக ரூ.740.37 கோடி மதிப்பீட்டில் நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

56) **புழல் சுத்திகரிப்பு நிலையம்**

புழலிலுள்ள பழைய 300 MLD குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ரூ.430.12 கோடி மதிப்பீட்டில் பொது மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் புனரமைக்கப்படும்.

**சென்னை பெருநகர குடிநீர் வழங்கல்!**

57) **கழிவுநீர் நிலையங்களில் அளவுமானிகள்** : ரூ.60 கோடி மதிப்பீட்டில் அனைத்து கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் அளவுமானிகள் பொருத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்புகளை மேசைகளை தட்டும் ஒலிக்கிடையே அறிவித்தார்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு தி.மு.க. மருத்துவரணி மற்றும் தஞ்சை மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், மாநில மருத்துவர் அணி செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி, தஞ்சை மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் வசந்தகுமார், திருவையாறு தொகுதி அமைப்பாளர் மரு.அரவிந்தன் முன்னிலையில் மாபெரும் மருத்துவ முகாமை தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. கள்ளப்பெரம்பூரில் தொடங்கி வைத்தார். உடன் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, து.செல்வம், ஒன்றிய செயலாளர் உலகநாதன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் உதயன், ஒன்றிய கவுன்சிலர் ஜோதி, ரெங்கராஜ், ரவி, தமிழழகன், சம்பத், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சாமி, ரமேஷ், அம்பிகாபதி, ராஜேந்திரன் துணை அமைப்பாளர் சதிஷ், சுரேஷ், பேட்டன் ராஜ், தொகுதி அமைப்பாளர்கள் விக்னேஷ்,துணை அமைப்பாளர் விஜய் குமார், பிரகாஷ், திருச்செல்வி, காயத்திரி, சங்கீதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பொதுமக்களின் நலனைக் கருதி வரும் 29 அன்று நியாய விலைக் கடைகள் வழக்கம்போல் இயங்கும்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, மார்ச் 27 –

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு எவ்வித பாதிப்புமின்றி, அத்தியாவசியப் பொருட்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. பொதுவாக மாதத்தின் கடைசிப் பணி நாளன்று ஒத்திசைவுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவதில்லை. இம்மாதத்தின் கடைசிப் பணிநாளான 29.03.2025 அன்று சனிக்கிழமையாக அமைகிறது. மேலும், அதனைத் தொடர்ந்து வரும் 30.03.2025 அன்று தெலுங்கு வருடப்பிறப்பு மற்றும் 31.03.2025 அன்று ரம்ஜான் பண்டிகையினை முன்னிட்டு அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விடுமுறை நாட்களாகும்.

எனவே, இம்மாதத்தின் கடைசி இரண்டு நாட்கள் நியாய விலைக் கடைகளுக்குப் பொது விடுமுறை தினங்களாக வருவதால், அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி வருகின்ற 29.03.2025 அன்று அனைத்து நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு, வழக்கம் போல் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படும். குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை 29.03.2025 அன்றும் நியாய விலைக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.



சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் கிழக்கு ஒன்றியத்தின் சார்பில். கழக தலைவர்.முதல்வர். மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த தினத்தையொட்டி ஓமலூர். கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர். ஒ எம். ரமேஷ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில். கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் லியோனி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர். சி.ராஜேந்திரன், தொகுதி பொறுப்பாளர் இ.ஜி. சுகவனம், பொதுக்குழு பி.குப்புசாமி, ஒன்றியச் செயலாளர் கே.சி. அறிவழகன், டி. ரமேஷ். குமரன்மணி, பேரூர்க் கழகச் செயலாளர் ரவிச்சந்திரன், பேரூராட்சி தலைவர் செல்வராணி ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.